ஆகிய நான்கு கிராமங்களில் மட்டுமல்லாமல், அதன் சுற்றுப்புறமுள்ள கிராமங்களையும் சேர்த்து இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கிராமங்களில் சிறப்பு மருத்துவக் குழுவால் வீடுதோறும் சென்று காய்ச்சல் குறித்து கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கிராமங்களில் குளோரின் சேர்க்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொசுப் புழு ஒழிப்புப் பணியும் முடுக்கிவிடப்பட்டு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டின் உட்புறமும் புகை மருந்து அடிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவார்ந்த சீரிய சிந்தனையில் உருவான இந்திய மருத்துவ முறையான நிலவேம்பு, மலைவேம்பு மற்றும் பப்பாளி இலைச்சாறு போன்ற இயற்கை மருந்துகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, மாநிலத்தில் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மர்மக் காய்ச்சல் சுவடுகளே இல்லாமல் தடுப்பதற்கு அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றது. எனவே, தமிழகத்தில் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மர்மக் காய்ச்சல் குறித்து தமிழக மக்கள் பயமோ, பீதியோ அடையத் தேவையில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிறகு பேசலாம். இன்னும் இரண்டு அலுவல்கள் உள்ளன. அவை முடிந்த பிறகு பேசலாம். உட்காருங்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2013 ஏப்ரல் 15] [திரு. பி. பழனியப்பன்]

"2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அரசினர் தனித் தீர்மானம்

சென்னை உள்நாட்டு விமான நிலைய இரண்டாவது முனையத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்ட மத்திய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரும், உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரும் சூட்டப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். விமான போக்குவரத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும், விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டும், 2,015 கோடி ரூபாய் மதிப்பில்